மட்டும் அல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு அண்ணன் அவர்கள் புதுப் பொலிவுடன் colourful ஆக வந்திருக்கிறார். (சிரிப்பு) 'என்றும் 16' ஆக இருப்பதனுடைய இரகசியம் என்னவென்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 3 முறை போட்டியிட்டு, 2 முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அந்த ஆனைமலைப் பகுதியைத் தனி வட்டமாக பிரித்துப் புதிய வட்டம் ஒன்றை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை ஏற்கெனவே உயர்மட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. வருவாய் நிருவாக ஆணையாளர், நில நிருவாக ஆணையாளர், நில சீர்திருத்த ஆணையாளர் ஆகியோர் கொண்ட உயர்மட்டக் குழு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினால் தகுதியின் அடிப்படையில் ஏற்கெனவே அந்த ஆனைமலைப் பகுதி தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும்கூட இதற்கான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரும் தொடர்ந்து அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நிதிநிலை அடிப்படையில் வருகிற காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிச்சயமாக புதிய வட்டம் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு

2018 ஜூன் 7]

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

150—

விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்துதல்

***5636—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்திலுள்ள விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மாவின் கனவை நனவாக்கும் வகையில் ஆட்சி செய்துகொண்டிருக்கும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டையில் மாவட்ட விளையாட்டு மைதானம் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்திலுள்ள Mini Stadium-*ஐ மேம்படுத்தக் கோரியுள்ளார். ஆனால், அந்த மாவட்டத்தில் மாவட்ட மைதானம் ஒன்று இருக்கிறது. அது அனைத்து வசதிகளுடன் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கடந்த எம்ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில், ரூ.4.00 கோடி மதிப்பில் அதில்,* Synthetic Athletic Track-*ஐ* open *செய்திருக்கிறார். அதேபோல், அந்த* Mini Stadium *அனைத்து வசதிகளுடன் இருக்கிறது. இந்நிலையில், பொது மக்கள், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர், திருமதி விஜிலா சத்தியானந்த் அவர்களிடம் அங்கு ஒரு* Multi Gym open *செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கையை*

[2018 ஜூன் 7

வைத்திருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கு ரூ.10 இலட்சம் நிதி அளிக்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். அந்த 10 இலட்சம் ரூபாயில் அங்கு ஒரு Modern Gym அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.*

திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியில், பாளையங்கோட்டை தொகுதியில் மேலப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள Mini Stadium மேம்படுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே பாளையங்கோட்டையில் உள்ள அண்ணா விளையாட்டு மைதானத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு உள்ளபடியே அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பாளையங்கோட்டையில் இருக்கிற அண்ணா விளையாட்டு மைதானத்தில் இட நெருக்கடியின் காரணமாகப் பல்வேறு விளையாட்டு அமைப்புகள் போட்டிகளை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் அமைக்க இடம் இல்லாத காரணத்தினால், வ.உ.சி. மைதானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. அதுபோன்று, பல்வேறு பணிகளுக்கு, இன்னும் விரிவாக்கம் செய்வதற்கு இட வசதி இல்லாமல் இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-15

என்னுடைய மூலக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள மேலப்பாளையத்திலுள்ள mini stadium-ல், 2009-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், அந்த விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு 7 ஏக்கர் நிலத்தை தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்டு விதிவிலக்களித்து அந்த இடத்தை அளித்தார்கள். அன்றையதினம் அந்த விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு அரசின் நிதியாக 22½ இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு, அதற்குப் பின்னர் இன்னும் ரூபாய் 10 இலட்சம் கொடுக்கப்பட்டு, மொத்தம் ரூபாய் 32½ இலட்சம் நிதியில் அந்த விளையாட்டு மைதானம் துவங்கப்பட்டது.

2018 ஜூன் 7]

அந்த விளையாட்டு மைதானம் துவக்கப்படும்போது, அதில் முக்கியத் தேவையான 400 மீட்டர் ஓடுபாதை, Football ground, Basketball court, Volleyball court *மட்டும் அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னர் அந்த விளையாட்டு மைதானத்தில் எந்தப் பணியும் நடைபெறாத காரணத்தால், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2009-2010 முதல் 2013-2014 வரை கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. அங்கே மக்கள் பார்ப்பதற்கு வசதியாக பார்வையாளர்* Gallery, *பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுற்றுச் சுவர் கட்டுதல், இதுபோன்ற பல்வேறு பணிகளுக்கு கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு, இன்னும் அங்கு பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மேலப்பாளையத்திலுள்ள அந்த விளையாட்டு மைதானத்தைப் பொறுத்தவரையில், முஸ்லிம்கள் மட்டும் பயன்படுத்தி வருவதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள், அது தவறு. அங்கு சம அளவிலே சமுதாய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துவதன்மூலம் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய மூலக் கேள்வி தொடர்பாக துணைக் கேள்வி கேளுங்கள்.*

திரு. டி.பி.எம். மைதீன்கான்: *எனவே, அந்த விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகக் காரணத்தைச் சொன்னேனே தவிர, வேறு எதுவும் இல்லை. அந்த விளையாட்டு மைதானம் மேம்படுத்தப்பட வேண்டும். அங்கு தேவையான பணிகளெல்லாம் நிறைய செய்யவேண்டி இருக்கிறது. குறிப்பாக, அங்கே நீச்சல் குளம் இல்லை. அதுபோல டென்னிஸ் விளையாட்டு அரங்கம் இல்லை. இதுபோன்ற பணிகளெல்லாம் அங்கே செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

அந்த விளையாட்டு மைதானத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜிலா சத்தியானந்த் அவர்கள் நிதி வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி நிதியை வழங்கினால், அந்தத் தொகுதியின் சட்டமன்ற

உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதுவரை 50 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளேன். மேலும் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கூடுதலாக நிதியை வழங்கவும் தயாராக இருக்கிறேன். அதற்குக் காரணம் அந்தப் பகுதியிலே இருக்கிற பல்வேறு இளைஞர்களின் கோரிக்கையாக இருப்பதால், இந்த வசதிகளெல்லாம் அங்கு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விளையாட்டுத் துறையைப் பொறுத்தளவில், அந்தப் பகுதி மேம்படுத்தப்படாமல் அப்படியே இருக்கிறது. அங்கே தன்னார்வலர்கள்கூட வந்து கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மரக் கன்றுகளை நட்டு அந்தப் பகுதியை மேம்படுத்தியிருக்கிறார்கள். அந்த விளையாட்டு அரங்கத்திற்கு உள்ளே செல்ல பாதை போடப்படவில்லை. (குறுக்கீடு) நான் கோரிக்கையைத்தான் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே இந்தத் துறையின் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். நிறைய விவரங்கள் உங்களுக்குத் தெரியும். ஆனால், நீங்கள் கேள்வியைக் கேட்கமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உரை நிகழ்த்துவதுபோல் விரிவாகப் பேசினீர்கள் என்றால், எனக்கு அவையை நடத்துவது கஷ்டம். எனவே, நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: முடித்துவிடுகிறேன். இதோ ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். அந்த விளையாட்டு மைதானத்திற்குச் செல்லக்கூடிய சாலைகள் போடப்பட வேண்டும். அதேபோல compound சுவர் உயர்த்தப்பட வேண்டும். அந்த விளையாட்டு மைதானத்திற்கு அருகில் இருக்கின்ற 2 ஏக்கர் அரசு நிலத்தையும் கையகப்படுத்தினால், அந்த விளையாட்டு மைதானம் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதைச் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, உட்காருங்கள். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]